Arimaa Nokku Journal
(UGC Care Group-I Journal)
ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

# ஆண்டவரின் கிருபை சிறுகதையில் உளவியல்

**ச.லட்சுமி,**
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் (CRE/TAM22PNOV/2022)*
*நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி- அறச்சலூர்*
*ஈரோடு.*
*நெறியாளர்:*
**முனைவர் ப.திலகவதி,**
*நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி-*
*அறச்சலூர் - ஈரோடு.*

*முன்னுரை:*

குழந்தை பேறு என்பது இறைவன் கொடுக்கும் வரம் என்பார்கள். ஒருபெண் தாயாகும் போதுதான் அவளுடைய வாழ்க்கை முழுமை அடைகிறது.பெண்மைக்கான மதிப்பும் கூடுகிறது என்பார்கள். அப்படி,உயர்வாக சொல்லப்படும் தாய்மை வரம் அனைவருக்கும் எளிதில் கிடைத்துவிடுவதில்லை. தற்போதைய மாறுபட்ட வாழ்க்கை சூழல் காரணமாக குழந்தை பாக்கியம் என்பது தாமதப்படுவது சர்வசாதாரணமாக மாறிவிட்டது. எத்தனையோ பெண்கள் பல வருடங்கள் சிகிச்சை எடுத்தும் குழந்தை பாக்கியம் என்பது கனவாகவே உள்ளது. பிறகு அக்கனவு உளப்போராட்டமாக மாறிவிடுகின்றது.

மனிதனின் வாழ்க்கையில் நிகழும் நிகழ்வுகளும் அனுபவங்களுமே அவரின் வாழ்க்கையில் இன்ப துன்பங்களை எதிர்கொள்ள வைக்கின்றன. அவ்வகையில் சிறுகதையாசிரியர் இமயம் அவர்களுடைய சிறுகதையில் வாழும் கதைமாந்தர்களின் வாழ்க்கையில் ஏற்பட உள்ள போராட்டம் என்னும் உளவியல் கூறானது அவர்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ தாக்கங்களை அவர்களிடம் உண்டாக்குகின்றன என்பதையும்

நவீன காலகட்டத்தில் பல பெண் எழுத்தாளர்கள் இருந்தாலும், குழந்தை பேறு இல்லாத பெண்களின் மனநிலை எப்படிப்பட்டதாக இருக்கும், குழந்தை பாக்கியத்திற்காக இறைவனை தேடிச் சென்ற பெண்ணுக்கு அவர் கொடுக்கும் கிருபை எப்படிப்பட்டதாக உள்ளது, என்ற உளவியல் பாங்கினை இக்கட்டுரை புலப்படுத்துகிறது.

**உளவியல் விளக்கம்:**

உளவியல் என்ற சொல் கிரேக்க வார்த்தையான “சைக் “என்பதிலிருந்து பெறப்பட்டது. இது மூச்சு ,ஆவி, ஆன்மா மற்றும் ஆய்வு என்பதற்கு ஒத்த லோகியா என மொழிப்பெயர்க்கபட்டுள்ளது. இது மனதிற்கும் நடத்தைக்கும் இடையே உள்ள தொடர்புகளை விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உளவியல் என்பது ஆங்கிலத்தில்”Physicology” எனப்படுகிறது.

உளவியல் என்பது மனித நடத்தையையும் மனித அனுபவத்தையும் அறிவியல் முறையில் ஆராய்வதாகும். மேலும், மனிதர்களின் செயல்கள் உணர்ச்சிகள் நடவடிக்கைகள் ஆகியவற்றை அறிய உதவும் அறிவியலே உளவியல் எனப்படும்.

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

சிக்மன்ட் என்பவரே நவீன உளவியலின் தந்தை ஆவார். இவரது காலம் 1856 முதல் 1939 வரை ஆகும். அவர் மனிதனின் ஞானவேல் மனம் பற்றியே பெரிதும் ஆராய்ந்தார். இவரது கோட்பாடுகள் ஃபிராய்டிசம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. நவீன உளவியல் பிராய்டின் கோட்பாடுகளை பின்பற்றியே இயங்குகிறது எனலாம், உளவியல் அடிப்படையில் மனம் இரண்டு வகைப்படும் அவை:-

- நனவுமனம்
- நனைவிழிமனம்

மற்றொரு வகையில் மனம் மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். அவை

அ) இட் - ID– எனப்படும் இச்சை உணர்வு

ஆ) ஈகோ- EGO எனப்படும தான் என்ற உணர்வு

இ) சூப்பர் ஈகோ – மனச்சான்று என்பதாகும்.

PSYCHE – ஆன்மா (அ) மனம் எனப்படுகிறது.

LOGOS - அறிவு (அ) விஞ்ஞானம் எனப்படுகிறது.

எனவே ஆன்மா (அ) மனம் பற்றிய அறிவு உளவியல் என அமைக்கப்படுகிறது.

உளவியல் என்பது தற்காலத்தில் நடத்தை மற்றும் அனுபவத்தை அறிவியல் மூலம் ஆராயும் ஒரு பிரிவாகும்.

மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை எங்கனம் அகத்தில் நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும் புறநிலைகளால் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிப்படைகின்றன என்பதையும் விளக்குவதே உளவியலாகும்.

**“உள்ளத்தில் உண்மையொளி**

**உண்டாயின் வாக்கினிலே**

**ஒளி உண்டாம்.”**

உள்ளத்தில் உண்மையும் தெளிவும் இருந்தால்தான் வாக்கினில் அது வெளிப்படும். என்பது போல

மனிதனின் அடி மனதில் அமுக்கப் பெற்ற நிறைவேறாத ஆசைகள் கனவுகள் போன்றவை பல்வேறு வடிவங்களில் மாறுபட்டு வரும் தன்மையை வெளிகாட்டுகின்றன.மனிதன் தான் எண்ணுகின்ற காரியம் தடைப்பட்டாலோ அல்லது நிறைவேறாமல் போனாலும் உளவியல் சிக்கலுக்கு ஆட்படுகின்றான். இதற்கு அவன் வாழும் சூழ்நிலையோ அல்லது உடன் வாழும் மனிதர்களோ இதற்கு காரணமாய்

அமைகின்றனர். மேலும், அவனது உடல் உறுப்புகளில் ஏதேனும் இறைதரப்பட்டாலும் உள்ளத்தில் போராட்டம் எழுகின்றது. ஆண்டவரின் கிருபை என்ற சிறுகதையில் பிரேமா விக்டர் தம்பதிகள் நீண்ட காலம் குழந்தையின்மையினால் ஏற்படும் மனஉளைச்சலால் எவ்வாறு தவிக்கின்றனர் என்ற போராட்டமான சூழலை எவ்வாறு எதிர்கொள்கின்றனர், போன்ற நிகழ்வுகளையும் கான முடிகின்றது.

**கதை காட்டும் உளப்போராட்டக் கூறுகள்:**

உளப்போராட்டம் என்பதில் உள்ளம் என்பத உணர்வு நிறைவேறாத தருணத்தில் உள்ளத்திடையே எழுகின்றன. இது ஆங்கிலத்தில் EMOTION என்றழைக்கப்கடுதிறது. இந்த உணர்ச்சி திருப்தி அடைவதற்கு தகுந்த சூழ்நிலை ஏற்படாவிட்டாலோ (அ) தடைகள் ஏற்பட்டாலோ கிளர்ச்சியானது போராட்டமாக உருவெடுக்கின்றது. இதுவே உணர்வு போராட்டம் என்று அழைக்கப்படுகிறது.

இச்சிறுகதையில் குழைந்தையில்லாத பிரேமா விக்டர் தம்பதிகள் குழந்தையை தத்தெடுக்க நினைத்தாலும் விக்டரின் தாய் தடை விதிக்கிறாள். இச்சூழ்நிலையில் பிரோமாவின் உணர்வுகள் உள்ளப்போராட்டமாக மாறுகின்றது.

**“குழலினிது யாழினிது எனபதம்; மக்கள்**

**மழலைச் சொல் கேளாதவர. (குறள் எண்** 66)

என்பது போல செல்வங்களுக்கும் சிறந்த செல்வம் மக்கள் செல்வமே, மக்கட் பேறு இல்லாதவர்கள் வாழ்க்கை நிறைவு பெற்ற வாழ்க்கையாக அமைவது இல்லை என்றும், மக்கள் மனதின் போராட்ட நிகழ்வை கதை மூலம் அறிந்து கொள்கிறோம்.

**சிறுகதை காட்டும் குழந்தையின்மை சிகிச்சையும் சிக்கல்களும்:**

“**காலில்லாத தொட்டில், காலில்லாத கட்டில்**” இரண்டுக்கும் இடைப்பட்டது தான் வாழ்க்கை. வாழ்க்கை என்னும் நீண்ட நெடிய பயணம் நமக்கு பல்வேறு அனுபவங்களையும் சுவாரசியங்களையும் தருகிறது. குறிப்பாக,பெண்ணுக்கு வாழ்க்கையே ஒரு அனுபவ பாடம் சில நேரங்களில் கற்றுக் கொள்ளும் நிலையிலும் சில நேரங்களில் கற்பிக்கும் நிலையிலும் இருக்கிறாள். பேதை,பெதும்மை,மங்கை,மடந்தை,அறிவை,தெரிவை,பேரிளம்பெண் என்ற ஏழு பருவங்களில் தன்னைத் தானே உயிர்பித்துக் கொள்ளும் தாய்மை பருவம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

சமுதாயத்தில் திருமணம் செய்த தம்பதியினர் ஒன்று (அ) இரண்டு வருடங்கள் குழந்தை பெற்றுக் கொள்ளும் அடையாளமே அவர்களது இல்லறவாழ்க்கையின் அடையாளச் சின்னம் என்று இச்சமுதாயம் அடையாளப்படுத்தி வைத்துள்ளது.

சிலருக்கு பொருள்,வசதி வாய்ப்புகள் இருந்தாலும் குழந்தை பாக்கியம் என்பது எட்டாத கனியாகவே உள்ளது. இவர்களை உலகம் ஏளனமாக பார்க்கிறது. இந்த சமுதாயத்தில் ஒரு பெரும் சவாலாவே உள்ளது.

காலம் காலமாக தனக்கு குழந்தை பேறு வேண்டும் என்று நினைக்கின்றார்களோ? இல்லையோ? இந்த சமூகத்தின் வாய்க் கதவை அடைக்கவே குழந்தை பெற வேண்டும் என்ற நிலைமாறாமல் வலுப்பெற்று நிற்கின்றது.

திருமணமான சில மாதங்களிலேயே நல்ல செய்தி உண்டா?என்ன விசேஷசம் என்ற கேள்விகளை எழுப்ப ஆரம்பித்துவிடுகின்றனர். இந்த சிறுகதையிலும் இதேநிலையினை எடுத்துக்காட்டுகிறார் இமயம். பிரேமா,விக்டருக்கு திருமணமான சில நாட்களிலேயே உடன் வேலை செய்பவர்கள் அக்கம் பக்கத்தினர் விசேக்ஷமா என்ற கேள்வியை கேட்க ஆரம்பித்துவிடுகின்றனர். பிரேமா ஆரம்பத்தில் சொல்றேன் என்று சொன்னவள் அடுத்தடுத்த ஆண்டுகளில் ட்ரீட்மென்ட்ல இருக்கேன் என்கிறாள். நாளாக நாளாக இருந்தால் சொல்ல மாட்டேனா என்று திரும்பி கேட்கும் படியாக மாறிவிடுகிறாள். பிறகு இந்த பல கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் யாருடைய விசேஷசத்திற்கும் போகக்கூடாது என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றாள். மேலும், தத்தெடுங்க அதுதான் பெஸ்ட் இந்த ஹாஸ்பிடல் போனா இருக்கும் டெஸ்ட்ப் பேபி சென்டர் போய் ட்ரீட்மெண்ட் எடுத்தா இருக்கும் என்று பிரேமாவை பார்ப்பவர்கள் எல்லாம் சொல்லும் படியான நிலைமாறிவிட்டது.

**கதையில் எழுத்தாளர் குறிப்பிடும் நீர்க்கட்டி பிரச்சனை பற்றிய செய்திகள்:**

நவீனகாலத்தில் பெண்களுக்கு தலைதூக்கி நிற்கும் பிரச்சினை நீர்க்கட்டி பிரச்சனை,சாதாரணமாக பெண்களுக்கு கர்ப்பப்பையில் நீர்க்கட்டி உருவாகும் அவை தானாகவே அழிந்துவிடும். பலருக்கு மருந்து மாத்திரைகளின் மூலம் கரைத்துவிடும் மிக சிலருக்கு தான் லேப்ட்ராஸ்கோப்பி சிகிச்சையின் மூலம் கரைய வைக்க வேண்டும். இக்கதையில் பிரேமாவுக்கு நீர் கட்டிகள் தானாக கரையவும் இல்லை மருந்து மாத்திரைகளுக்கும் சரியாகவில்லை லேப்ட்ராஸ்கோபிக் அளித்தாலும் ஆறு மாதங்கள் தான் வளராமல் இருக்கும் பிறகுமீண்டும் வளர்ந்துவிடும்.

நீர்கட்டிகள் வளராமல் இருக்கின்ற காலத்தில் கருத்தரிக்க வாய்ப்பு உள்ளது என்றாலும, அதற்கும் இடையூறாக ஹார்மோன் இன்பேலன்ஸ் என்ற பிரச்சினையால் 3,4 மாதங்களுக்கு தவறிய மாதவிடாய் சுழற்சி ஏற்படுகிறது. அவ்வாறு ஏற்பட்ட சுழற்சியும் நிற்காமல் உடல் உபாதையை கொடுக்கும் இவ்வாறான பிரச்சனைகளை பிரேமா எதிர்கொள்கிறாள் என்று இமயம் காட்டுகின்றார்.

கதையாசிரியர் ஒரு ஆணாக இருந்தாலும் நீர்கட்டி பிரச்சனையை சொல்லுகின்ற போது ஒரு பெண் எழுத்தாளர் போன்றும், ஒரு மருத்துவரைப் போன்றும் விளக்கி காட்டியுள்ளது சிறப்புக்குரியது ஆகும்.

**குழந்தையின்மை சிகிச்சையின் சிக்கல்களும் விளைவுகளும்:**

ஒவ்வொரு பெண்ணுக்கும் திருமணமாகி தமக்கு முதலில் ஆண் குழந்தை பிறக்குமா? பெண் குழந்தை பிறக்குமா? அது யார் போன்று இருக்கும் இரண்டாவது குழந்தை எத்தனை கால இடைவெளிக்குப் பிறகு பெற்றுக் கொள்ளலாம் என்றெல்லாம் யோசிக்கும் மனநிலையில் இருக்கின்றாள்.

இவ்வாறெல்லாம் கனவுகளோடு இருக்கும் தம்பதியினருக்கு குழந்தையின்மை என்ற ஒரு மனநிலை தோன்றிய பிறகு மருத்துவமனைகள் கோவில்கள் என்று அலைந்து திரிந்து சோர்ந்து போகின்றனர். இக்கதையில் பிரேமாவும் விக்டரும் இதே நிலையில் உள்ளனர்.; குழந்தையின்மைக்கான தீர்வுகள் பற்றிய கருத்துக்கள் எந்த யூடுப் சேனலில் பதிவிடப்படுகின்றதோ, அந்த பக்கங்களில் பார்த்த கோயில் தலங்களுக்கும் செல்வது போன்ற நிலையில் இருக்கின்றனர்.

மருத்துவமனைக்குச் செல்ல ஆரம்பித்த பிறகு ஆணோ பெண்ணோ பிறந்தால் போதும், ஊனத்துடன் பிறந்தாலும் போதும், பிறக்காமல் உருவாகிக் கருவிலேயே கரைந்து போனாலும் போதுமென்ற மனநிலை பிரேமாவுக்கு ஏற்படுகிறது.காரணம், மலடி என்ற ஒரு பட்டம் மட்டும் வரக்கூடாது என்பதனால் இப்படிப்பட்ட மனநிலையில் யோசிக்கின்றாள்.

நவீன கால கட்டத்தில் சீரற்ற மாதவிடாய் பிரச்சனைக்காக நாட்டுமருந்து சித்தமருத்துவம்,ஆங்கிலமருந்து என்று மாற்றி மாற்றி சிகிச்சை எடுக்கும் போது அந்த பெண்ணின் உடல் ஆரோக்கியமானது கெட்டு நோய்க்கு ஆளாக்கப்படுகிறாள். ஆண்டவன் கிருபையிலும் பிரேமாவுக்கு பலவகையான சிகிச்சையால் கர்ப்பப்பையிலும் வலது பக்க மார்பக புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றது.கர்ப்பப்பையை நீக்கினால் மார்பக புற்றுநோயை குறைக்க வாய்ப்பு உள்ளது என்று மருத்துவர்கள் சொன்னாலும் குழந்தை பேறு இல்லாத ஒரு பெண் எப்படி கர்ப்பப்பை அகற்ற இடம் கொடுப்பாள். ஆனால், பிரேமாவும் அதற்கு ஒத்துக் கொள்ளாமல் ஒரு மார்பகத்தை மட்டும் அகற்றிக் கொள்கிறாள். கர்ப்பப்பை புற்றுநோயானது உடலுக்கு ஆபத்து ஏற்படுத்தும் தருணம் நெருங்கிவிட்டது என்று மருத்துவர் சொன்ன பிறகு எந்த வழியிலும் இனி குழந்தை பேறு கிடைக்கப் போவதில்லை என்ற முடிவுக்கு பிறகுதான் கர்ப்பப்பையை அகற்ற சம்மதம் தெரிவிக்கின்றாள்.

சிறு வயதிலிருந்தே எதற்கும் மருந்து,மாத்திரைகளை பயன்படுத்தாத ஒரு பெண், குழந்தையின்மை காரணமாக எடுத்துக்கொண்ட மருந்துகள் பல, அதன் விளைவாக ஏற்பட்ட நோய்க்கு எடுத்துக் கொள்ளும் மருந்துகளும் பல, என்ற மனநிலையில் குழந்தை பேறுக்கான சிகிச்சை எடுத்துக் கொண்டு கிடைத்த பலன் நோயே என்பதை **மழைத்துளியை ஆற்று வெள்ளத்தில் பிடிப்பதற்கு போனது** போன்று மாறிவிட்டது என்ற சூழலை எழுத்தாளர் இமயம் அவர்கள் அழகாக எடுத்துக்காட்டி உள்ளார்.

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

**முடிவுரை:**

இன்றைய காலச்சூழலில் குழந்தையின்மை சிகிச்சை ஒருசிலருக்கு மட்டுமே சாதகமாக அமைகிறது. மற்றவர்கள் சிகிச்சையோடு வயிற்றுக்கட்டி, இரத்தக்கொதிப்பு போன்ற நோயினையும் வரப்பிரசாதமாக பெற்றுக்கொள்கின்றனர். அது சாகும் வரை அவர்களை விட்டு விலகுவதில்லை. குழந்தைபேறு இல்லாதவர்கள் முதலில் குடும்பத்தில் உள்ளவர்கள் பிறகு சமூகம், சமுதாயம் என்ற வரிசையில் எவ்வாறான சூழலுக்கு ஆட்படுத்தப்படுகின்றார்கள் என்பதோடு மட்டுமல்லாமல் கர்ப்பப்பை அகற்றிய பிறகு அந்தப் பெண் சந்திக்கும் சிக்கல்களை பற்றியும் குழந்தையின்மை சிகிச்சையில் அவளுக்கு ஆண்டவர் கொடுத்த கிருபை இதுதான் என்றும் எழுத்தாளர் அழகாக கையாண்டு உள்ளார் என்பதை கட்டுரையின் மூலமாக அறிய முடிகின்றது.

## ஆய்வாதாரங்கள்:

1) ஆண்டவன் கிருபை சிறுகதை - ஆனந்தவிகடன் வெளியீடு
ஜனவரி 27 - 2022

2) உளநலவியல் - தா.ஏ.சண்முகம்
சென்னை - தமிழ் வெளியீட்டுக்
கழகம் - 1970